# அகநானூற்றில் திருவிழாக்கள்

**முனைவர். ரா. சுமேஷ்**
உதவிப்பேராசிரியர்,
முதுகலை வரலாற்றுத்துறை
இக்பால் கல்லூரி
திருவனந்தரம், கேரளா

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** II

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## முன்னுரை

சங்க இலக்கியங்களில் சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய விழாக்கள் பற்றிய குறிப்புகள் கிடைத்துள்ளன. அவற்றுள் சில சமயத் தொடர்பானவை, சில சமூகத் தொடர்பானவை. விழாக்களின் போது பாணரும் கூத்தரும் ஆடியும், பாடியும் மக்களை மகிழ்வித்தனர். நகரங்கள் சில "விழவு மேம்பட்ட பழவிறல் மூதூர்" என்று பாராட்டப்பட்டுள்ளன. சங்க கால விழாக்கள் மக்களின் அன்றாட வாழ்வோடு ஒன்றித்திருந்தன. அகநானூற்றில் இடம் பெறும் விழாக்கள் பற்றி இக்கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளன.

## சங்க கால விழாக்கள்

விழாக்கள் தெய்வத்தை வணங்கும் பொருட்டும். அனைத்து மக்களும் ஒன்று கூடி உறவுகொண்டு மகிழும் பொருட்டும், உணர்வுகளைப் புதுப்பித்து எழுச்சி இந்திரவிழா, தை நீராட்டு, நீர் விழா, திரப்பரங்குன்றத்து விழா, திருப்பதியில் விழா, உள்ளி விழா, பங்குனி விழா, பூந்தொடை விழா, கோடியர் விழா, வெறியாட்டு விழா, மன்னனின் பிறந்த நாள் விழா போன்ற பல விழாக்கள் கொண்டாடப்பட்டதற்குக் குறிப்புக் காணப்படுகின்றன.

சங்க இலக்கியம் ஏறுதழுவல் பற்றிக் குறிப்பிடுகிறது. இக்காலத்தில் அது ஜல்லிக்கட்டு, மஞ்சு விரட்டு என்னும் பெயர்களில் விழாக்களாக நடைபெறுகின்றன.

## கார்த்தினைத் திருவிழா

சங்ககாலத் தமிழர்கள் கொண்டாடிய சமய விழாக்களில் குறிப்பிடத்தகுந்தது கார்த்திகைத் திருவிழாவாகும், கார்த்திகை நட்சத்திரத்தை "அறுமீன்" என்றும். "இறஞ்செய் திங்கள்" (நற்றிணை 202) என்றும் நற்றிணை குறிப்பிடுகின்றது.

வானில் சிறுமுயலாகி மறுவின் நிறம் விளங்கித் தோன்ற, மதி நிறைந்த கார்த்திகை நன்னாளில், இருள் அகன்ற நள்ளிரவில் வீடுகளும் தெருக்களும் திருவிளக்குகளால் அழகு பெற்றன. மாலைகள் தொங்கவிடப்பட்டன. ஊர் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து கொண்டாடும் கார்த்திகைத் திருவிழாவினை நம்மோடு மகிழ்ந்து கொண்டாட தலைவர் வருவார் என்று தலைவி கூறியதாக அகநானூறுப் பாடலொன்று குறிப்பிடுகின்றது. அதுவே:

**“மழைகால் நீங்கிய மாசு விசும்பில்**
**குறுமுயல் மறுநிறம் கிளர, மதி நிறைந்து.**
**அறுமீன் சேரும் அகலிருள் நடுநாள்**
**மறுகு விளக்குறுத்து. மாலை தூக்கி**
**பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய**
**விழவுடன் அயர” (அகம் 141)**

என்பதாகும்.

காடுகளில் மழை பெய்யாது இருந்தால் உயர்ந்த மலைகளிலிருந்து வீழும் அருவிகளில் நீரற்றுப் போயிற்று, அம்மழைகளில் கார்த்திகைத் திருவிழாவின்போது ஏற்றப்படும் விளக்குகள் போல இலைகள் இல்லது இலவமரத்தில் நெருக்கமாக பூக்கள் மலர்ந்திருக்கும் என்பதனைக் கீழ்வதும் பாடல் வரிகள் அறியலாம்.

**அருவி யான்ற உயர்சிமைமருங்கில்**
**பெருவிழா விளக்கம் போலப் பலவுடன்**
**இலையில் மலர்ந்த இலவமொடு**
**நிலையுயர் பிறங்கல் மலையிந் தோரே (அகம், 185)**

**நீர்விழா**

முற்காலத்தில் மன்னர்களும் நீர்விழாவில் கலந்துகொண்டனர் என்பதற்கு அகநானூற்றுப் பாடல்கள் (அகம். 222.376) மூலம் அறியலாம். மிகுந்த அழகினையும் நிமிர்ந்த தோளினையும் உடைய ஆட்டனத்தி என்பான், முழவொலி கேட்கும் ஆரவாரம் மிக்க கழாஅர் என்னும் ஊரில் விழாவில் நடனம் ஆடினான் என்ற செய்தியை,

**“வான்உற நிவந்த நீல்நிறப் பெருமலைக்**
**கான நாடன் உறீஇய நோய்க்கு, என்**
**மேனி ஆய்நலம் தொலைதலின், மொழிவென்**
**முழவுமுகம் புலராக் கலிகொள் ஆங்கண்**
**கழாஅர்ப் பெருந்துறை விழவின் ஆடும்” (அகம்.222)**

என்ற பரணர் பாடல் மூலம் அறியமுடிகிறது.

குரிகால் வளவன் ஆரவாரம் மிக்கதன் சுற்றத்துடன் புனல் விழாவினைக் கண்டு மகிழ்ந்த வண்ணம் இருந்தான் என்பதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் விளக்குகின்றன.

**“கலிகொள் சுற்றமொடு கர, காதல்காண**
**தண்பதம் கொண்டு தவிர்த்த இன்இசை**
**ஒண்பொறிப் புனைகால் சேவழப் புரள**
**கருங்கச்சு யாத்த காண்பின் இவ்வயிற்று**
**இரும்பொலம் பாண்டூல், மணியொடு தெளிர்ப்ப,**
**புனல் நய்து ஈடும் அத்தி அணிநயந்து**
**குாவிரி கொண்டு ஒளித் தாங்கும் அன்னோசி” (அகம்.376)**

**திருப்பதியில் விழா**

“விழவுடை விழுச்சீர் வேங்கடம்” (அகம், 61) என்ற வரி விழாக்கள் நிறைந்த பெருஞ்சிறப்பினைக் கொண்டது திருவேங்கடமலை குளிர்ந்தசாரல் கொண்டது. மூங்கில் வளம் துக்கம். “காம்புடை நெடுவரை வேங்கடம்” (அகம், 393) என்னும் தொடரால் இதனை அறிந்துகொள்ளலாம்.

“விழவுடை விழுச்சீர் வேங்கடம்” (அகம், 61) என்ற வரி விழாக்கள் நிறைந்த பெருஞ்சிறப்பினைக் கொண்டது திருவேங்கடமலை குளிர்ந்தசாரல் கொண்டது. மூங்கில் வளம் மிக்கது. “காம்புடை நெடுவரை வேங்கடம்” (அகம், 393) என்னும் தொடரால் இதனை அறிந்துகொள்ளலாம்.

**உள்ளி விழா**

கொங்கு நாட்டினர் உள்ளிவிழாக் கொண்டாடினார். கொங்கர்கள் மணியினை இடுப்பைச் சுற்றிலும் கட்டிக்கொண்டு தெருவில் ஆடுவர். இதனை,

**“மணிஅரை யாத்த மறுகின் ஆடும்,**
**உள்ளி விழவின் அன்ன**
**ஆல்ஆ கின்றுஅது பலர்வாய்ப் பட்டே?” (அகம். 368)**

எனக் குறிப்பிட்டுள்ளார்.

**பங்குனி விழா**

முருகனுக்காக கொண்டாடப்படும் விழாவாகும். உறையூரில் பங்குனி விழா நடந்ததாக அகநானூறு கூறுகிறது. உறையூரில், பெருகிவரும் நீர் கரைகளை உடைத்துக்கொண்டு ஓடும். குாவிரி ஆற்றின் அழகிய வெண்மையான மணலையுடைய மணங்கமழும் குளிர்ந்த சோலையில் உத்தரமும் நிறைமதியும் கூடிய தண்ணாளில் பங்குனி உத்தரவிழா நடைபெறும் என்பதனை கீழ்வரும் பாடல் வரிகளால் அறிய முடிகிறது.

**“வென்றுஏறி முரசின் விறற்போர்ச் சோழர்**
**இன்கடும் கள்ளின் உறந்தை ஆங்கன்**
**வருபுனல் நேரிதரும் இருகரைப் பேரியாற்று**
**உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழிற்**
**பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்” (அகம், 137)**

**பூந்தொடை விழா**

இது வீரர்களின் கலைப்பயிற்சி தொடக்கவிழா ஆகும். பகைவரது பகைப்பலத்தை அழித்த குதிரைகடையுடைய நீண்ட கழலாற் பொலிவு பெற்ற, வன்கண்மையை உடைய மழவர்கள் “பூந்தொடை விழா” வினைப் பொலிவுடன் கொண்டாடுவர். ஆவவிழாவின் முதல் நாளைப் போன்ற பொலிவினையுடைய மணலை வீட்டின் முற்றத்தில் பரப்புவர்.

**“வார்கழல் பொலிந்த வன்கண் மழவர்**
**பூந்தொடை விழவின் தலைநாள் அன்ன**
**திருமணல் ஞெமிரிய திருநகர் முற்றம்” (அகம், 187)**

வில்லில் நாணேற்றி அம்பினைக் குறிபார்த்து எய்யும் விழா இதுவெனக் கருதலாம்.

**கோடியர் விழா**

ஆடும் கலைஞர்கள் கோடியர் எனப்பட்டனர். விறலியர் மயில்போல அசைந்தாடும்போது கூத்தர்கள் முழவினை முழக்கிக்கொண்டு பின்னே செல்வர். இக்கருத்து உள்ள பாடலை அகநானூற்றில் காணமுடிகிறது.

**“பாடுஇமிழ் அருவிப் பாறை மருங்கின்**
**ஆடுமயில் முன்னது ஆக, கோடியர்**
**விழவு கொள் மூதூர் விறலி பின்றை**
**முழவன் போல அகப்படத் தழீஇ” (அகம், 352)**

**முடிவுரை**

பண்டைத் தமிழகத்தில் விழாகட்குப் பஞ்சமில்லை என்றும், சமய விழாக்களே அதிகமாக இருந்தது என்றும் இவ்விழாக்களின் போது பாட்டும் கூத்தும் விருந்துகளும் மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தின என்றும் தெளிவாக உணரமுடிகிறது. சமய விழாக்களாயினும் அவை எந்த ஏற்றாழ்வுமில்லாமல் கொண்டாடினார்கள் என்பதை அகநானூற்றில் காண முடிகிறது.